# இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் பிரதேச செயலாளர்களுக்கு அளிக்கப்படும் அதிகாரப் பகிர்நதளிப்பு

## வழியனுமதி வழங்குவது தொடர்பான நஷ்டஈட்டை நிர்ணயித்தலும் மரங்களை வெட்டிவீழ்த்தல் அல்லது கிளைகளைத் தறித்தல் தொடர்பான கட்டளைகளைப் பிறப்பித்தலும்

2013 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி

# 1. அறிமுகம்

1.1 2002 இன் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இதனகத்து ஆணைக்குழு எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையில் மின்சாரக் கைத்தொழிலின் பொருளாதார, பாதுகாப்பு, தொழில்நுட்ப ஒழுங்குறுத்துகை அமைப்பாக விளங்குகின்றது.

1.2 2013 இன் 31 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் 'மின்சாரச் சட்டம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்)2அ (1) (ஆ) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழு அந்தச் சட்டத்தின் அட்டவணை 1 இன் 3,4,5 மற்றும் 6 ஆகிய விடயங்களினால் அதன் பேரில் உரித்தளிக்கப்பட்டுள்ள ஏதாவது அதிகாரத்தை எவரேனும் ஒரு பிரதேச செயலாளருக்குப் பகிர்ந்தளிக்கலாம்.

1.3 எனினும், மின்சாரச் சட்டத்தின் அட்டவணை 1 இன் விடயம் 3 இன் பிரகாரம், ஏதாவது ஒரு காணியின் மீது, மேலால் அல்லது கீழ் ஒரு மின்சார மார்க்கத்தை நிறுவுவதற்கு அல்லது நிறுவி வைப்பதற்கு, உரிமம் பெற்ற ஒரு தரப்பை அதிகாரம் அளிக்கும் அல்லது தடைசெய்யும் நிமித்தம் பிரதேச செயலாளர்களுக்கு அதிகாரம் உரித்தளிக்கப்பட்டுள்ளன. அக் கூறப் பட்ட அவ்வட்டவணையின் விடயம் 5 இல் ஏதாவது ஒரு காணியின் உரிமையாளர்கள் / இருப்பாட்சியாளர் மற்றும் உரிமம் பெற்ற தரப்பினர் ஆகியோர் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள ஒரு மின் மார்க்கத்தினை ஒரு காணியில் இருந்து அகற்றுவதற்கு ஒரு தேவை எழுகின்ற போது, பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே, மின்சாரச் சட்டத்தின் குறித்த 3 மற்றும் 5 ஆகிய விடயங்களின் கீழ் அப் பிரதேச செயலாளர்களுக்கு ஏதாவது அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒரு தேவைப்பாடு எழமாட்டாது.

1.4 குறித்த மின்சாரச் சட்டத்தின் 2அ (2) ஆம் பிரிவின் பிரகாரம், ஏதாவது அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட பிரதேச செயலாளர்கள் ஆணைக்குழுவினால் அத்தகைய அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு அமைய அத்தகைய அதிகாரத்தைப் பிரயோகிப்பார்கள்.

1.5 மின்சாரச் சட்டத்தின் 2அ (3) ஆம் பிரிவின் பிரகாரம், 1.2 ஆம் பந்தியின் கீழ் ஏதாவது அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டாலும், அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை பிரயோகிக்க அல்லது ஏதாவது கடமையை அல்லது தொழிற்பாட்டை மேற்கொள்ளுவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழு அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

## 2. மின்சாரச் சட்டத்தின் அட்டவணை 1 இன் விடயம் 4 ஆல் ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்

2.1 மின்சாரச் சட்டத்தின் அட்டவணை 1 இன் விடயம் 4 ஆல் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஆணைக்குழு பிரதேச செயலாளருக்கு பகிர்ந்தளிப்பது:

(அ) வழியனுமதி வழங்கல் தொடர்பில் உரிமம் பெற்ற தரப்பிடம் இருந்து காணி உரிமையாளர் ஒருவர் அறவிடலாம் எனும் நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்கும்,

(ஆ) ஒரு வழியனுமதியினால் உரித்தளிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு உரிமையைப் பிரயோகிப்பதன் விளைவாக ஒரு நபர் தான் அனுபவிக்கின்ற ஏதாவது ஒரு காணிக்கு அல்லது அசையும் ஆதனங்களுக்கு ஏற்படும் ஏதாவது இடையூறு தொடர்பில் உரிமம் பெற்ற தரப்பிடம் இருந்து அறவிடலாம் எனும் நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்கும், மற்றும்

(இ) பாதிக்கப்படும் ஒரு நபரின் விண்ணப்பத்தின் அல்லது தனது சொந்த முன்மொழிவின் பேரில், உரிமம் பெற்ற ஒரு தரப்பு மேற்குறித்த (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றின் கீழ் எவரேனும் ஒரு நபருக்கு ஏதாவது ஒரு நஷ்டஈட்டைச் செலுத்துவதற்குக் கடமைப்பட்டதாக இருக்கின்றதா என்பது பற்றி நிர்ணயிக்கும் நிமித்தம் விசாரணைகளை நடத்துவதற்கும் ஆகும்.

## 3. மின்சாரச் சட்டத்தின் அட்டவணை 1 இன் விடயம் 6 ஆல் ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்

3.1 மின்சாரச் சட்டத்தின் அட்டவணை 1 இன் விடயம் 6 ஆல் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஆணைக்குழு பிரதேச செயலாளருக்கு பகிர்ந்தளிப்பது:

(அ) உரிமம் பெற்ற ஒரு தரப்பினால் குறித்த மின்சாரச் சட்டத்தின் விடயம் 6 இன் (5) ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது விடயத்தை ஏற்பதற்கும்,

(ஆ) மின்சாரச் சட்டத்தின் விடயம் 6 இன் (5) ஆம் பந்தியின் கீழ் ஏதாவது ஒரு குறித்த விடயம் பற்றி (6) ஆம் பந்தியின் கீழ் தரப்பட்டவாறு விசாரிக்கப்படுகின்ற ஒரு வாய்ப்பை குறித்த தரப்புகளுக்கு வழங்கியதன் பின்னர், கட்டளைகளைப் பிறப்பிப்பதற்குமாகும்.

## 4. ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

4.1 பிரதேச செயலாளர்கள், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பின்வரும் பணிப்புரைகளுக்கு அமைய மேற்குறித்த 2 மற்றும் 3 ஆகிய பிரிவுகளின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

(அ) பிரதேச செயலாளர்களினால் நடாத்தப்படும் விசாரணைகள், புலனாய்வுகள், கூட்டங்கள் முதலிய அனைத்தும் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்களும் சரியான ஒரு நடபடிமுறையைக் கொண்டதாகவும் இயற்கை நீதிக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் இடம்பெற்றனவென்று நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். இது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் சட்டமுறைத்தன்மை மற்றும் நம்பத்தகுதன்மை ஆகிய அனைத்து மீதும் நியாயத்தன்மையை உறுதிப் படுத்துவதாக அமைய வேண்டும்.

(ஆ) பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகித்து நடத்தப்பட்ட விசாரணைகள், புலனாய்வுகள் கூட்டங்கள் முதலிய அனைத்தினதும் குறிப்புகள் / பதிவுகள் என்பன பேணப்பட்டு சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் போது ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(இ) நிலம் வரையறுக்கப்பட்ட ஒரு இயற்கை வளமானதால் அதன் அதிகூடிய பயன்பாட்டை அனுகூலப்படுத்தும் நிமித்தம் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஈ) பிரதேச செயலாளரினால் எடுக்கப்படும் ஏதாவது ஒரு தீர்மானம் அது எடுக்கப்பட்டுள்ள அடிப்படை அடங்கலாக சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் உரிய முறையில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.